# மெட்ரோ ரயில் ஊழியர்கள் 3 பேர் பணி இடைநீக்கம்

■ சென்னை

தவறான கட்டளையை கொடுத்து மெட்ரோ ரயில் சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் செயல்பட்டதாக கூறி மெட்ரோ ரயில் ஊழியர்கள் 3 பேர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை மெட்ரோ ரயில் வழித்தடம் 1, 2-ல் உள்ள அனைத்து ரயில் போக்குவரத்துகளை நிர்வகிக்கும் அலுவலர் அல்லாத பணியாளர்கள் 3 பேர் கடந்த 29-ம் தேதி அவர்கள் பணி செய்யும் இடத்தை விட்டு, சிக்னல் அமைப்பில் தவறான கட்டளையை கொடுத்துள்ளனர். ரயில் சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் செயல்பட்டு ரயில்சேவைகளை தடுத்து விட்டனர். எனவே, வேண்டுமென்றே தவறான கட்டளையை கொடுத்து ரயில் சேவையில் பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் செயல்பட்ட போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் ஆர்.மனோகரன், கே.பிரேம்குமார் மற்றும் பணிமனை கட்டுப்பாட்டாளர் சிந்தியா ரோஷன் சாம்சன் ஆகிய 3 பேரும் நிறுவனத்தால் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.